சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.17.06.2025
OS.No.4/2022
DW 1 : கணேசன் (வயது 66 ) த/பெ. அப்பாராசு
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு கு.வி</u>

எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டை, வக்கீல் மூலமாக மனு தாக்கல் செய்து நேரில் பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்து அதன் விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதி தரப்பில் எனக்கு அனுப்பிய அழைப்பாணையுடன் வழக்குரை பிராது நகல் எனக்கு கிடைத்ததா என்றால் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வழக்குரை பிராது போல ஆவணம் ஏதேனும் எனக்கு அழைப்பாணையுடன் வந்ததா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 24.02.2025 ஆம் தேதியிட்ட முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பமும் , புரோநோட்டில் உள்ள கையொப்பமும் ஒன்றாக இல்லை. எனது சின்ன தங்கை மாலதியை திருமணம் செய்து கொண்டவர் பெயர் அர்ச்சுணன் என்றால் சரிதான். மேற்படி அர்ச்சுணன் எனது வீட்டில் எத்தனை வருடமாக தங்கி இருந்தார் என்றால் அவரது பையன்கள் எனது வீட்டில் 4,5 வருடங்கள் தங்கி படித்தார்கள். அவர் எனது வீட்டிற்கு அவ்வப்போது

வந்து செல்வார். எனது தங்கை எனது வீட்டில் எத்தனை வருடங்களாக தங்கி இருந்தார் என்றால் வருவார், போவார், தங்குவதை கணக்கு பார்க்கவில்லை. தற்போது, மேற்படி எனது தங்கையோ, அவரது கணவரோ, அவர்களது பிள்ளைகளோ எனது வீட்டில் இல்லை என்றால் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக எனது தங்கை மாலதியின் குடும்பத்தினர் எனது வீட்டிற்கு வராமல் இருக்கிறார்கள் என்றால் கடந்த 4 வருடமாக வருவதில்லை. நான் இல்லாத நேரத்தில் வந்து செல்வார். குறிப்பாக எனது மைத்துனர் அர்ச்சுணன் எத்தனை வருடமாக எனது வீட்டிற்கு வராமல் இருக்கிறார் என்றால் 3,4 வருடங்களாக வராமல் இருக்கிறார். குறிப்பாக எந்த வருடத்திலிருந்து வராமல் இருக்கிறார் என்றால் குறிப்பிட்டு கணக்கு சொல்ல முடியாது. விசேஷத்தின் போது, எனது மைத்துனர் அர்ச்சுணனுடன் கலகலப்பாக பேசக்கூடிய இயல்பான உறவு எனக்கு இருக்கிறதா என்றால் சூழ்நிலைக்கு தகுந்தவாறு பேசுவேன். எனது மைத்துனர் எனது வீட்டில் இருந்தவரை எனக்கு உறவாகவும், எனது வேலைக்கு உதவியாகவும் இருந்து வந்தார். நான் தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீட்டில் சும்மா தான் இருக்கிறேன். நான் இதற்கு முன்பு கடந்த 5 வருடமாக என்ன வேலை பார்த்தேன் என்றால் எந்த வேலையும் பார்க்கவில்லை, எனக்கு இதயத்தில் பேஸ் மேக்கர் வைத்து 18 வருடங்கள் ஆகிறதால் என்னால் எந்த வேலையும் செய்ய முடிவதில்லை. இந்த விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது இதய நோயை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள படி எனது விவசாய வேலையை நான் எத்தனை வருடங்களாக செய்து வருகிறேன் என்றால் விவசாய குடும்பத்தில் பிறந்தேன், கடந்த 18 வருடங்களாக விவசாய வேலை செய்வதில்லை, அதற்கு முன்பு செய்தேன். மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரிதான். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கி கொண்டேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 16.12.2021 ஆம் தேதியன்று வாதி அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பை தொடர்ந்து அனுப்பிய அழைப்பாணையை நான் பெற்றுக்கொண்டு வாதியை சந்தித்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், வாதியை நான் சந்தித்தேன். எந்த தேதியில் எப்போது வாதியை சந்தித்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அழைப்பாணை அனுப்பிய பிறகு நான் வாதியை சந்திக்கவில்லை என்றும், வாதியை சந்தித்ததாக பொய்யான விவரங்களை எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பிறகு நான் வாதியை நேரில் சந்தித்தேனா என்றால் இல்லை. அர்ச்சுணன் என்பவர் எனது மைத்துனர் என்றும் முருகேசன் என்பவர் வாதி தங்கராஜின் மகன் என்றும் கூறினால் சரிதான். வாதி தங்கராஜை எனக்கு தெரியுமா என்றால் முன்பு விவசாய வேலைக்கும் வீட்டு வேலைக்கும் உதவியாக இருந்துள்ளார். வாதி திருமங்களத்தை சேர்ந்தவர். வாதி குடும்பத்தினர் விவசாய கூலி வேலை செய்பவர்கள் என்றால் சரிதான். எவ்வளவு காலத்திற்கு முன்பு எவ்வளவு காலம் வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் என்னிடம் வேலை செய்தார்கள் என்றால் நான் பேஸ் மேக்கர் வைத்ததற்கு பின்பு அவ்வளவாக வேலைக்கு வரவில்லை. கடந்த 4, 5 வருடங்களாக வேலைக்கு வருவதில்லை. 2020க்கு முன்பு வரை வாதி வேலை பார்த்தாரா என்றால் எனது மைத்துனர் அர்ச்சுணன் முன்னிலையில் வேலை பார்த்தார். எனது மைத்துனர் எனக்கு உதவியாக நான் சொன்ன வேலைகளை மட்டுமே செய்து வந்தார் என்றால் சரிதான். நான் விவசாய வேலையை விட்டபிறகு வாழைக்காயை வாங்கி விற்று வந்தேன், அதற்கான வேலைக்கு வாதி வருவார். எனது மைத்துனர் அதனை பராமரித்து வந்தார். சாகுல் என்பவரின் நிலத்தை நான் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சாகுல் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது. ஆங்கரைக்கு அருகில் உள்ள சாகுல் என்பவருக்கு சொந்தமான 5-1/2 ஏக்கர் நிலத்திலும், ஊழையாற்றுக்கு அருகில் உள்ள மேற்படியாருக்கு சொந்தமான 5-1/2 நிலத்திலும் நான் நேரடியாக குத்தகை விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி 2 நிலங்களிலும் வாழை சாகுபடி செய்து தற்போது வாழையை அறுவடை செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. சாகுல் என்பவருக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பி விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் அது அவர்களின் விருப்பம், எனக்கு தெரியாது. புரோ நோட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை அதனால் அவ்வாறு கூறுகிறேன். புரோநோட்டில் உள்ள கையொப்பம் மோசடியானது என நிருபிக்க நடவடிக்கை ஏதேனும் இதுவரை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மோசடியாக புரோநோட்டை உற்பத்தி செய்து வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எனது வக்கீலிடம் சொல்லியுள்ளேனா என்றால் கையொப்பம் என்னுடையது இல்லை என்று தான் சொல்லியுள்ளேன். அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி வக்கீலிடம் சொன்னேனா என்றால் இல்லை. எனது மனசாட்சிபடி எனது கையொப்பம் என்று எனக்கு நன்கு தெரியும் என்பதால் தான் புரோநோட்டில் உள்ள கையொப்பத்தை சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பேஸ் மேக்கர் எனக்கு வைத்தபிறகு எனது வருட வருமானம் என்ன என்றால் தெரியவில்லை. எனது பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள் அதன் மூலம் குடும்பம் நடத்துகிறேன். எனது பையன் வேலை தேடிக்கொண்டிருக்கிறார். எனக்கு 4 பிள்ளைகள் இருக்கிறார்கள். எந்த பிள்ளை எனக்கு வருமானத்திற்கு உதவியாக இருக்கிறார்கள் என்றால் சூழ்நிலைக்கு தகுந்தவாறு பிள்ளைகள் வருமானத்திற்கு உதவி செய்வார்கள். எனது மாத குடும்ப செலவு எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு சொந்த வீடு மற்றும் சொந்த கார் உள்ளது என்றால் காரை அடகு வைத்துவிட்டேன், சொந்த வீடு இல்லை. எனக்கு 3 பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 2,3 வருடங்களில் 3 பேருக்கும் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். எனது பெண் பிள்ளைகளுக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் நான் உடல்நிலை சரியில்லாமல் ஞாபக மறதியில் இருக்கிறேன், காலை என்ன சாப்பிட்டேன் என்றே தற்போது ஞாபகம் இல்லை, அதனால் எந்த வருடம் திருமணம் செய்து வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. அதனால் தான் எனது புரோநோட்டில் உள்ள

கையொப்பத்தை ஞாபக மறதியில் தான் என்னுடையது இல்லை என்று நான் கூறுகிறேனா என்றால் இல்லை, தேதி தான் என்னால் ஞாபகத்தில் இல்லை என்று கூறுகிறேன். 2018, 2019 வருடங்களில் எனது பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தேனா என்றால் எனது மூத்த பெண் பிள்ளையின் மகன் 2 ஆம் வகுப்பு படிக்கிறான், எந்த வருடம் திருமணம் செய்து வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. எனது பெண் பிள்ளைகளுக்கு நான் தான் செலவு செய்து திருமணம் செய்து வைத்தேன். எனக்கு 18 வருடமாக வருமானம் இல்லாத நிலையில் எவ்வாறு 3 பிள்ளைகளுக்கு 2,3 வருடங்களில் திருமணம் செய்து வைத்தேன் என்றால் எனது மனைவி சேமிப்பில் திருமணம் செய்து வைத்தேன். நான் தங்கராஜ் போன்ற நபர்களிடம் கடன் வாங்கி தான் திருமணம் செய்து வைத்தேன் என்றும், அதற்காக வாதிக்கு தாவா புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு நான் கூறுவது போல் எந்த வித சேமிப்பும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னிடம் விவசாய கூலியாக பல வருட காலமாக வேலை செய்த வகையில் எனக்கு பழக்கமானவர் என்றும் எனது மகளின் திருமணத்திற்காக வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக தாவா புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நல்ல வருமானம் சம்பாதித்து வருகிறேன் என்றும் அதனை வழக்கில் மறைத்து ஏழை விவசாயி என்று பொய்யான விவரங்களை கூறி எனது வாக்குமூல விசாரணையில் கூறி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்யும் எண்ணத்தில் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள எனது கையொப்பத்தை மறுத்து கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கு அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் ஆனால் பதில் அறிவிப்பு வாதிக்கு அனுப்ப வில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் வாதியை மோசடி செய்ய பார்க்கிறேன் என்று கூறி வாதி இலால்குடி

காவல் நிலையத்தில் 29.11.2021 ஆம் தேதியன்று புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். காவல் நிலையத்தில் மேற்படி புகார் சம்மந்தமாக எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது நான் வாதியிடம் வாங்கிய கடனை திருப்பி தந்துவிடுவதாக ஒப்புக்கொண்டேனா என்றால் இல்லை, நான் கடன் வாங்கவில்லை என்று தான் கூறினேன். வாதியிடம் நான் பணம் வாங்கவில்லை என்றும் மோசடியாக புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று கூறி வாதிக்கு நான் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை, காவல் நிலையத்திலேயே கடன் வாங்கவில்லை என்று கூறிவிட்டேன். வா.சா.ஆ.1 ன் படி நான் வாதியிடம் கடன் வாங்கிக்கொண்டு, அதனை வட்டியுடன் திருப்பி கொடுக்க ஒப்புக்கொண்டு, வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், தற்போது அதனை மறுத்து வழக்கிற்காக கட்சி செய்கிறேன் என்றும் கூறினால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் படி வாதிக்கு நான் தாவா தொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
கணேசன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/- Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி